# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டிற்கான சிறப்புக் கல்விமாணித் தேர்வு (2014/2015) (Nov/Dec - 2019)

## EDS 3223 விசேட தேவைகள்சார் கல்வி (Special Needs Education)

நேரம் - 03 மணித்தியாலங்கள்

**பகுதி I இல் இருந்து இரு (02) வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து இரண்டு (03) வினாக்களுக்கும் மொத்தமாக நான்கு (05) வினாக்களுக்கு விடைதருக.**

---

## பகுதி I

1. (அ) "விசேட தேவைகள்சார் கல்வி" என்ற எண்ணக்கருவிற்குரிய வரைவிலக்கணங்கள் இரண்டினை முன்வைக்குக. (3 புள்ளிகள்)

   (ஆ) "அனைவருக்கும் கல்வி" என்ற தேசிய கல்வி இலக்கினை அடைவதில் விசேட தேவைகள்சார் கல்வியின் முக்கியத்துவத்தை ஆராய்க. (5 புள்ளிகள்)

   (இ) சாதாரண வகுப்பறை ஒன்றின் கல்விச் செயற்பாடுகளில் இடர்பாடுகளை எதிர்கொள்ளும் மாணவர்களின் பல்வேறு பிரிவினர் பற்றி கருத்துரைக்குக. (6 புள்ளிகள்)

2. (அ) இயலாமையுடைய பிள்ளைகளுக்கான சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு என்றால் என்ன? எனக் குறிப்பிட்டு, அதன் குறிக்கோள்களை முன்வைக்குக. (4 புள்ளிகள்)

   (ஆ) சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்களின் திட்ட அமுலாக்கப் படிமுறைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

   (இ) இயலாமையுடைய பிள்ளைகளுக்கு வலுவூட்டலை வழங்குவதில் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வின் பங்களிப்பினை உமது பிரதேசத்தை மையமாகக் கொண்டு ஆராய்க. (6 புள்ளிகள்)

3. (அ) நீர் களப்பயணத்தை மேற்கொண்டு அவதானித்த விசேட கல்வி நிறுவனத்தின் பணிகளை விளக்குக. (4 புள்ளிகள்)

   (ஆ) மேற்படி நிறுவன செயற்பாடுகளை வெற்றிகரமானதாக முன்னெடுப்பதிலுள்ள தடைகளையும், அதற்கான தீர்வுகளையும் எவ்வாறு இனங்கண்டுள்ளீர் என்பதை ஆராய்க. (5 புள்ளிகள்)

(இ) விசேட கல்வி ஏற்பாடுகளைச் செய்யும் வகையில் பாடசாலைகளினால் ஆற்றக்கூடி பணிகளை விளக்குக.

(5 புள்ளிகள

## பகுதி – II

4. (அ) பிள்ளைகளிடத்தில் நடத்தைப் பிறழ்வுகள் ஏற்படுவதற்கான காரணங்களை விளக்குக

(6 புள்ளிகள்

(ஆ) விசேட தேவையுடைய குழந்தைகள் பிறப்பதற்கான காரணிகளை பட்டியற்படுத்துவதுடன் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் முன்வைக்குக.

(8 புள்ளிகள்

(இ) புலன்கள் ரீதியாக குறைபாடுடையவர்களை வகைப்படுத்தி அவர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் காணப்படும் பிரச்சினைகள் எவ்வாறு அவர்களின் கற்றலுக்குத் தடையாக அமைகின்றன என்பதை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்

5. (அ) ஐக்கிய நாடுகள் சமவாயத்தால் முன்வைக்கப்பட்ட சிறுவர் உரிமைகளின் பட்டயத்தில் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கும், விசேட சூழலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளைகளுக்கும் பிரயோகிக்கக்கூடிய உறுப்புரைகள் பற்றி கருத்துரைக்குக.

(6 புள்ளிகள்

(ஆ) விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகளின் கல்வி வரலாற்றின் ஐந்து பருவங்களைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொரு பருவமும் எவ்வாறு வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்பதை ஆராய்க

(8 புள்ளிகள்

(இ) பாடசாலை வகுப்பறைகளில் சாதாரண மாணவர்களுடன் விசேட தேவையுடைய மாணவர்களை ஒன்றிணைத்துக் கற்பிப்பதால் ஏற்படக்கூடிய சாதக, பாதக விளைவுகளை விமர்சன ரீதியாக ஆராய்க.

(10 புள்ளிகள்

06. (அ) விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளில் சமூகம் வகிக்கும் வகிபாகங்களை இலங்கையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (6 புள்ளிகள்)

(ஆ) விசேட தேவைகள்சார் வகைப்பாட்டில் உள்ள பிள்ளைகளின் கற்றலை முன்னேற்றும் பொருட்டு பெற்றோருக்கு நீர் எவ்வாறான ஆலோசனைகளை முன்வைப்பீர் என்பதனை விளக்குக.

(8 புள்ளிகள்)

(இ) இன்று பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உட்படுத்துகைக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை எதிர்காலத்தில் வெற்றி பெறச் செய்ய மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளை பரிந்துரைக்குக.

(10 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) இலங்கையில் விசேட கல்வி ஏற்பாடுகள்
(ஆ) பிள்ளைகளில் யுத்த ரீதியான பாதிப்புக்களும் அதற்கான தீர்வுகளும்
(இ) விசேட தேவைகள்சார் கல்வி பற்றிய ஆசிரியரின் தேர்ச்சிகள்
(ஈ) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் உட்படுத்துகைக் கல்வியும்

(4 x 6 =

**மொத்த புள்ளிகள் : (பகுதி I) 28 + (பகுதி II) 72 = 100**